# நற்றிணையில் சூழலியல்

# Ecological views in Nattrinai

**முனைவர் வெ.பரிமளம்,** உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

**Dr.V.Parimalam**, Assistant professor, Department of Tamil Literature, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi

ORCID ID:https://orcid.org/0000-0002-5955-3801

**DOI : 10.5281/zenodo.10005022**

## Abstract

Ecology means surroundings. It is derived from the Greek word okios. The relationship between the nature with all living beings, trees, plants, birds is called environment. In Sangam literature land is divided into 5 parts namely kurunji, mullai, marutham, Neithal and palai. The names of lands are based on the plants, flowers found on the place. Even the food they eat and the work they done was all based on the land. Water is the main source of the land. so, water is considered as their life. The main source of water is rain. If there is no water and rain it will affect all. The main cause for rainfall is planting more number of trees. So the people in Sangam period planted more trees. Trees were planted according to the land. Trees protects from land sliding, it gives place for birds and it is the food source for all creatures. In order to protect people from cyclones, Tsunami etc. more trees were planted in the coastal region. Water in the sea evaporates so the place in the sea will be vacuum. so the air from the land move to the sea so places near the coastal regions were so hot. knowing this Sangam people planted more number of trees. Bacteria to all living beings depends on others for food. This creates the balance in nature. If one creature increases and the other decreases the food chain will break. Rat was killed by eagles. The contaminated remaining's of animals are eaten by vultures. Tigers kills elephants. Tigers are called the apex of an ecosystem. Knowing the importance of the plant and trees they planted more saplings. As trees protects the environment cutting down of trees is considered as sin. Animals were killed only for food and not for any causes. The people of Sangam period know the importance of the environment and it is explained in Nattrinai.

**ஆய்வுச் சுருக்கம்**

சூழலியல் என்பது தாவரங்கள் விலங்குகள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களையும் அவ்வுயிரினங்கள் தொடர்பு கொண்டுள்ள இயற்பியல் கூறுகளையும் உள்ளடக்கியதாகும். ஓக்கியோஸ் எனும் கிரேக்க மொழி சொல்லில் இருந்து தோன்றிய எக்காலஜி என்பதை சூழலியல் என்பர். பூமியில் உள்ள அனைத்து இயற்கை நிலைகளும் சூழல் என்பதில் அடங்குகின்றன. உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள காற்ற, நீர் போன்றவை அடங்கிய இயற்கை நிலை தான் சூழலியல் என்று கூறுகிறது.(கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, பக்கம்- 462) உலகில் உள்ள உயிரினங்கள் வாழ நிலம், நீர்,காற்று செடி, கொடி, மரங்கள்,பறவைகள் உள்ளிட்ட அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயலாற்ற வேண்டும். உயிரினங்களின் இணைவே சூழல் என்றழைக்கப்படுகிறது. அனைத்து உயிரினங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த சங்கத்தமிழர் இயற்கையைத் தன்னிலிருந்து பிரித்துப் பார்க்காமல் அதனோடு இணைந்து வாழ்ந்தனர். சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையில் காணப்படும் சூழலியல் பதிவுகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**Keywords:** நிலம், சூழல், நற்றிணை, சங்க இலக்கியம், சூழலியல், Ecology, Sangam Literature, Land, Natrinai

**நிலமும் சூழலும்**

சங்கத் தமிழர்கள் இயற்கையைப் பேணினர். இயற்கையால் அமைந்ததே உலகு என்னும் கொள்கையை உடையவர்கள். நிலம், நீர், செருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய அனைத்தும் சேர்ந்ததுதான் இயற்கை என்கிறது புறநானூறு. அத்தகைய இயற்கையை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று பகுத்த தொல்காப்பியர் நிலம், நீர், காலநிலை ஆகியவற்றை முதற் பொருளாகவும் மனிதன் உள்ளிட்ட பறவை, செடி, கொடி, விலங்கு ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கருதினார். ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உயிரற்ற கூறுகள், தாவரங்கள், விலங்குகள், பூஞ்சைகள் நுண்ணுயிர்கள், மரங்கள், பறவைகள் உள்ளிட்ட அனைத்தும் சூழல் தொகுதி என்று அழைக்கப்பட்டது. சங்க இலக்கியங்களில் நிலத்தை முன் வைத்தே சூழல் தொகுதி உருவாக்கப்பட்டது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலத்தைப் பாகுபடுத்திய தமிழர்கள் அங்கிருந்த மரங்கள், மலர்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பெயர் வைத்தனர். சூழல் தொகுதியில் வாழ்ந்த மக்கள் குறிப்பிட்ட மண்ணுக்குரிய தாவரங்களையும் விலங்குகளையும் இறைச்சியையும் உண்டு வாழ்ந்தனர். குறிஞ்சி சூழல் தொகுதியில் வாழ்ந்த மக்கள் அங்கு கிடைத்த தினை, வேட்டை விலங்குகளின் இறைச்சி போன்றவற்றையும், நெய்தல் நில மக்கள் நீர் இறைச்சியையும் உண்டு வாழ்ந்தனர். மண்ணே மக்களின் வாழ்வை தீர்மானித்தது. குறிஞ்சியும் முல்லையும் தன் இயல்பிலிருந்து மாறிய நிலம் பாலை நிலம் ஆகும். பாலை நிலம் ஒரு வறண்ட வலமற்ற நிலமாகும். உழுது பயிர் செய்தோம் வேட்டையாடியோ, மீன் பிடித்தோ

உணவு உண்ண முடியாத சூழ்நிலையில் அந்த மக்கள் ஆறலைக் கள்வராக மாறியிருக்க வேண்டும் எனவே சூழலே மக்களின் தொழிலைத் தீர்மானித்தது எனலாம்.

**நீரும் சூழலும்**

நீரே நிலத்தின் தன்மையைத் தீர்மானித்தது. நிலம் என்பது உடம்பாகவும் நீர் என்பது உயிராகவும் கருதப்பட்டது. “நீரின்றி அமையாது உலகு“ என்பார் வள்ளுவர் . இதை, “நீர் இன்று அமையா உலகம் போல” என்கிறது. (நற்றிணை,1). நீர்வளம் இல்லாவிட்டால் நிலங்கள் வறண்டு அங்குள்ள உயிர்கள் பாதிக்கப்படும் என்பதை நன்கு உணர்ந்த தமிழர்கள் நீரைப் பெறுவதற்கு மழையே முக்கியக் காரணி என்பதையும் உணர்ந்திருந்தனர். “நிலம் நீரால் நிரம்பவும் மலை மேல் உள்ள மரங்கள் முதலானவை தழைக்கவும் சுனையில் நீர் நிறைந்து அங்குள்ள பயிர்கள் வளரவும் நரை குடிகள் சந்தன மரத்தின் மீது படரவும் மேகம் மழையைப் பொழிதலாகிய செயலைச் செய்தது” என்கிறது நற்றிணை(5) என்று நீருக்குக் காரணமான மழை பற்றிக் கூறுகிறது.

**மரங்களும் சூழலும்**

மரங்கள் சுமார் 38 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது என்பர். மண் அரிப்பைத் தடுக்கவும், மண் வளத்தை மேம்படுத்தவும், நுண் உயிரிகள் வளரவும், பறவை விலங்குகள் போன்றவற்றின் உணவு மூலமாகவும் அவற்றின் வாழிடங்களாகவும் மரங்கள் அமைகின்றன. நற்றிணையில் குறிஞ்சிக்குரிய மரங்களாகச் சந்தனம், வேங்கை, மூங்கிலும் முல்லை நிலத்திற்குக் கொன்றை, போன்ற மரங்களும் மருத நிலத்தில் காஞ்சி, மருதம் போன்ற மரங்களும் நெய்தல் நிலத்தில் கண்டல்,புன்னை, ஞாழல்,பனை போன்ற மரங்களும் பாலை நிலத்தில் ஓமை, பாலை, கள்ளி போன்ற மரங்களும் சுட்டப்பட்டுள்ளன. மரங்கள் நிலத்துக்கு ஏற்ப வளரும் தன்மையுடையது.

அனைத்து மரங்களையும் அனைத்து இடங்களிலும் வளர்க்க முடியாது. குறிஞ்சி நிலத்தில் இருக்கக்கூடிய மரங்கள் ஆழ வேர் கொண்டவை. உயரமாக வளரக்கூடியவை. மண் கரைந்து ஓடாமல் வேர்களை இறுக்கிப் பிடிக்கும் தன்மைகொண்டவை. கடல் சீற்றம்,புயல் போன்றவற்றால் ஏற்படும் வெள்ளம் முதலியவற்றில் இருந்து மக்கள் தம்மைக் காத்துக் கொள்ள கடற்கரையோரங்களில் தாழை, புன்னை,ஞாழல் போன்ற மரங்களை நட்டு வளர்த்தனர். தாழைகள் அலைகளைத் தாங்கும் தன்மை கொண்டது. எனவே பாலை மரங்களை வேலிகளாக அமைத்திருந்தனர் அவற்றைக் கண்டல் வேலி என்பர். கண்டல் வேலிகள் பற்றிய செய்தியை,

**குருகின் வெண்புறம் மொசிய வார்க்கும் தெண்கடல்**

**கண்டல் வேலிய ஊர் அவள் (நற்றிணை -74 ,6-10)**

என்றும்

**தெண் திரை மணிப் புறம் தைவரும்**

**கண்டல் வேலி நும்துறை கிழவோற்கே(நற்றிணை-54,10-11)**

என்றும் கூறுகிறது.

பெரும் அலைகளை சிறு நுரைகளாக மாற்றும் தன்மையானது வளைந்த மடல்களையுடைய தாழை மரங்களுக்கே உரித்தானது . இதை "திரை முதிர் அரைய தடந் தாட் தாழை" (மேலது,131,4) என்கிறது. நெய்தல் நிலங்களில் தாழை அதிக அளவில் காணப்படுவதற்கு தமிழர்களின் சூழலியல் அறிவே காரணமாக இருக்க வேண்டும். கடற்கரையோரங்களில் மட்டுமின்றி ஆற்றங்கரை ஓரங்களிலும் ஞாழல், புன்னை மருதம் முதலான மரங்கள் நடப்பட்டு இருந்தன.

**கடற்கரைச் சோலைகள்**

கடல் நீர் ஆவியாகி அவ்விடத்தில் வெற்றிடம் உருவாகும் . கடற்கரையில் உள்ள காற்றானது கடலில் உள்ள வெற்றிடத்தை நோக்கிச் சென்று விடுவதால் கடற்கரைகள் வெப்பமுடையதாகவே இருக்கும். இதை உணர்ந்த சங்கத் தமிழர்கள் கடற்கரை ஓரங்களில் மரங்கள் நிறைந்த சோலைகளை அமைத்திருந்தனர் என்கிறது.(நற்றிணை 117)

**உணவுச்சங்கிலி**

இவ்வுலகில் உள்ள நுண்ணுயிர்கள் முதல் பேருயிர்கள் வரை உணவுக்காக ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கின்றன. உணவுக்காகச் சார்ந்து வாழும் நிலையே இயற்கை சமநிலையைத் தோற்றுவிக்கின்றது. ஓர் உயிரினம் மிகுதியாகி மற்றொரு உயிரினம் அழிந்து விட்டால் சமநிலை அழிந்து போகும். சமநிலை பேணுதல் என்பது சூழலியல் பாதுகாப்பில் முக்கியமானதாகும். முல்லை நிலத்துப் பறவையாகிய கோழி பறவையாகிய மழை நீர் வடிந்த அகன்ற காட்டில் ஈரம் காயாத மணலை நன்றாகப் பறித்து அதில் உள்ள நங்கூழ் புழுவை உணவாகக் கொள்ளும். (நற்றிணை 217) குறிஞ்சி நிலத்தில் ஆண் புலியானது பெண் யானை புலம்புமாறு காட்டிலுள்ள ஆண் யானையைக் கொல்லும். (38)

ஆந்தைகளின் உணவு எலிகள் ஆகும் .எலிகள் சுலபமாகப் பெருகும் தன்மை உடையது. அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் அது உணவு உற்பத்தியை பாதிக்கும். எலிகளே ஆந்தைகளைக் கட்டுப்படுத்தும் என்பதை உணர்ந்து அதைத் தலைவி வாயிலாகப் பதிவு செய்கின்றனர்.

**மை ஊன் தெரிந்த நெய் வெண் புழுங்கல்**

**வான் சூட்டொடு மதியம் பேணுதும் (நற்றிணை 83,5-6)**

என்கிறாள் தலைவி. தலைவனைச் சந்திக்கும் போது சத்தமிடாமல் இருந்தால் எலிக்கறி சமைத்துத் தருவதாக ஆந்தைகளிடம் கூறும் சங்கத் தலைவி வாயிலாக ஆந்தைகளின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றனர். ஆறலைக் கள்வர்கள் கொன்றழித்தப் பிணங்களைக் கழுகு உண்ணாதவாறு நரி விரட்டியது. ஈரமான பச்சைக் கொடிகளை எருமை மாடுகள் மேயந்தன. பாலை நிலத்தில் செல்லும் மக்களுக்குச் செந்நாய் கொன்ற மரையாவானது

உணவாக அமையும் போன்ற செய்திகள் உணவுக்காக ஒவ்வொன்றும் சார்ந்து வாழ்ந்த நிலையை உணர்த்துகிறது.

**மறுஉற்பத்தி**

மரம் செடி கொடிகளின் தேவையை உணர்ந்து இருந்ததால் சங்கத்தமிழர்கள் அவற்றைத் தங்களின் உறவாகக் கொண்டனர் தங்களுடைய கருத்துக்களை விளக்குவதற்கு அறிஃணை உயிர்கள், மரம், செடி, கொடிகள் போன்றவற்றைப் பயன்படுத்தினர். தான் வளர்த்த புன்னை மரத்தை தன் சகோதரியாக கருதிய தலைவி தலைவனை அதன் கீழ் சந்திக்க மறுக்கிறாள்.இதை

**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**

**அன்னை கூறினள் புன்னை யது சிறப்பே ( நற்றினை 172,4-5)** என்கிறது.

புன்னை மரத்தைத் தங்கள் இல்லத்தில் ஒருவராகக் கொண்டதோடு புன்னையை மறு உற்பத்தி செய்ததையும் அறிய முடிகிறது. தினை விதைத்து அவற்றை அதிகமாக விளைவித்த தன்மையை “சிற்சில வித்திப் பற்பல விளைந்து தினை” (328,2-3) என்பதாலும். தலைவி தன் வீட்டில் செடிகள் மரங்கள் போன்றவற்றை வளர்க்கும் தன்மை உடையவளாக இருந்திருக்கிறாள் என்பதை அவள் உடன் போக்கு சென்றபோது அவளைக் காணாமல் பராமரிக்க ஆளில்லாமல் வயலைக் கொடிகளும் கரிய பூங்கொத்துகளை உடைய நொச்சி மரமும் வருந்தியது என்பர் (305). மரங்களைத் தங்கள் சொந்தமாகக் கருதியோடு அவற்றை மீண்டும் உற்பத்தி செய்யவும் அறிந்திருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**மரங்களை வெட்டுதல்**

சுற்றுச்சூழலுக்கு மிகப்பெரிய பாதுகாவலாக விளங்கும் மரங்களை வெட்டுதல் என்பதைச் சங்கத்தமிழர் அறமற்ற செயலாகக் கருதினர். ஒரு சிறு சிறு செடி கூட யானையைக் கட்டும் கட்டுத் தறியாக மாறும். எனவே சிறு செடிகளைக் கூட வெட்டக்கூடாது என்கிறது. (நாலடியார் 192) மருத்துவப்பொருட்களைத் தயாரிக்கக்கூட மரத்தினை வெட்டக்கூடாது என்ற உயர்ந்த கொள்கை கொண்டவர்கள் தமிழர்கள்.இதை, “ மரம் சா மருந்தும் கொள்ளார்” என்கிறது. (நற்றினை 226) மரங்களில் தெய்வம் உறைவதாகக் கருதி மரத்தை வழிபட்டனர். இதை, “கடவுள் முது மரத்து“ என்கிறது.(மேலது, 83- 3) மரங்களின் சிறப்பினைக் கருதி அவற்றை வெட்டக்கூடாது என்பதற்காக அவற்றில் தெய்வம் உறைவதாக ஒரு கருத்து பரவி இருக்கலாம்.

**வலசை போதல்**

பறவைகள் இனப்பெருக்கத்திற்காகவும், வெப்பம், குளிர் போன்ற இயற்கைக் காரணிகளாலும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்று ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாழும். அவ்வாறு பறவைகள் ஓரிடத்தில் இருந்து வேறொரு இடத்திற்குச் செல்வதை, வலசை

போதல் என்பர். இக்கருத்தை வெள்ளிவீதியார், சிறிய வெண்மையான குருகு பறவையே எம்முடைய ஊருக்கு வந்து தெளித்த மீனைத் தின்று பின் உன் ஊருக்கு செல்லும்போது என் தலைவரிடம் என் துன்பத்தைச் சென்று கூறுவாயாக (70) என்று வினவும் பாடல் நெய்தல் நிலப்பறவைகள் நிலம் விட்டு வந்ததை அறிய முடிகிறது. இதே கருத்தை, " நாராய் நாராய் செங்கால் நாராய்" என்ற சத்திமுத்து புலவரின் அடிகளும் விளக்குகிறது. தலைவனின் பிரிவால் வாடிய தலைவி, தினைக் கதிர்களை உண்ண வந்த கிளியை நோக்கி தினையை உண்டபின் தலைவருடைய மலைக்குச் சென்றால் அங்கு தன் தலைவனையும் கண்டு வர வேண்டும் (102) என்று கூறுகிறாள். இதனால் கிளிகள் ஓரிடத்தில் இருந்து பல இடங்களுக்கு உணவு தேடச் செல்லும் தன்மையை அறிய முடிகிறது. பறவைகள் அக்காலத்தில் தன் நிலத்தை விட்டு வேறொரு இடத்திற்கு சென்று வந்ததை காண முடிகிறது.

**சூழல் பேணுதல்**

ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் தங்களுடைய உணவுத் தேவைக்காக மட்டுமே பிற உயிர்களை வேட்டையாடினர். வேறு எக்காரணத்திற்காகவும் எந்த உயிரையும் கொல்வதில்லை. அவ்வாறு கொன்றால் அவை சூழலைப் பாதிக்கும் என்பதை அறிந்தே இருந்தனர். தலைவியைச் சந்திக்க வந்த தலைவன் எந்த உயிரினங்களுக்கும் இடையூறு ஏற்படக் கூடாது என்றே கருதினான். நெய்தல் நிலத்தில் தன்னுடைய தேர் ஊர்ந்து வரும்போது நண்டுகள் தேர் காலால் அழிந்து விடாமல் இருக்க தேரை விலக்கி ஓட்டினான். இக்கருத்தை

**ஆழி மருங்கின் அலவன் ஓம்பி**

**வலவன் வன்பு ஆய்ந்து ஊர (நற்றிணை-7,8)**

என்கிறது. கிளியை விரட்டுவதற்காகத் தொண்டகப் பறையை பயன்படுத்தினர். இதை,

**தொண்டகச் சிறுபறை பாணி அல்லது**

**பைந்தாட் செந்தினைப் படுகிளி ஒப்பும் (நற்றிணை 104,5-6)**

என்கிறது. யானைகளை விரட்டுவதற்காக எரிகொள்ளிகளைப் பயன்படுத்தினர். உணவுத் தேவைக்காக தவிர எந்த உயிரையும் கொல்லவில்லை.

**இயற்கை எரு**

சங்க கால தமிழர்கள் இயற்கையில் கிடைத்த எருக்களைப் பயன்படுத்தினர். மலர்கள் உதிர்ந்த மகரந்தங்கள் எருவாக மாறும். இதைத் தாது எரு என்பர்.

**பைந் தாது எருவின் வைகு துயில் மடியும் (271,2.)**

**தாது எரு மருங்கின் ஆ புறம் தீண்டும் (343,3).**

இயற்கையில் கிடைத்த இலை தழைகளைப் பயன்படுத்தி சூழலைப் பாதுகாத்தனர் என்பதை அறிய முடிகிறது.

**தழையாடை**

இன்றைய நாகரிக காலகட்டத்தில் பல்வேறு விதமான ஆடைகளை நாம் அணிகிறோம். ஆனால் நாம் பயன்படுத்தும் ஆடைகள் மண்ணில் மட்கிப் போகாமல் சூழலுக்கு கேடு விளைவிக்கின்றன. அக்காலத்தில் மண்ணில் மக்கிப் போகக் கூடிய தழையாடைகளைப் பயன்படுத்தினர். இதை,

**தளிர் சேர் தண் தழை தூவி (நற்றிணை,204,1)**

என்னும் அடிகள் உணர்த்துகிறது.

**முடிவுரை**

சங்ககால மக்கள் விலங்குகள், பறவைகள் போன்ற அனைத்தும் தம் வாழ்வியலோடு பின்னி பிணைந்திருந்ததை உணர்ந்திருந்தனர். தங்கள் நூல்களில் எந்த இடத்திலும் சூழலியல் கருத்துக்களை வலிய புகுத்தவில்லை. ஆனால் சூழலோடு ஒன்றி அவர்களுக்கு உட்பட்ட நிலத்தில் வாழ்ந்து அவர்களுக்குரிய உணவு உண்டு அவர்களின் வாழ்வை எந்த உயிருக்கும் தீங்கு விளைவிக்காமல் வாழ்ந்தனர். இயற்கையையும் சூழலையும் பேணிப் பாதுகாத்தனர் என்பதை நற்றிணை வழி அறிய முடிகிறது.

**References**

1. Kriyas Tamil dictionary - kirya pathipagam,Chennai. 3rd edition, November 2020

2.Nattrinai- New century book house,41.B siddco industrial estate, Ambattur, Chennai, February 2007

3. Nalladiyar- Manivasagar pathipagam,pondy bazaar, Chennai

4.Porulathikaram-Saiva sidhantha noot pathipu kalagam,154 TTk salai, Chennai.August 1995

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**பரிமளம். வெ “ நற்றிணையில் சூழலியல்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 4, அக்டோபர் 2023, பக். 40-46

**Cite this Article in English**

**Parimalam. V “Ecological views in Nattrinai”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 4, October 2023, pp. 40-46